1972 சனவரி 29]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, டோட்டல் எமால்யூல்மன்ட்ஸ் குறையாத அளவுக்கு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். அசிஸ்டென்டாக தனியாரிடத்தில் ஒருவர் வேலை பார்க்கும்போது, ரூ. 255-இருந்தது என்று சொன்னால், மின்சார வாரியத்திற்கு வந்ததற்குப் பிறகு ரூ. 255-பெற்றவர்கள் ரூ. 309-பெறுகிறார்கள். மொத்தத்தில் எந்த அளவிலும் குறைக்கப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, மாயவரம்—திருவாரூர் எலெக்டிரிசிடி அண்டர்டேக்கிங்கை அரசு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு சில சிப்பந்திகளுக்கு சம்பள பாக்கி வரவில்லை என்று சொல்கிறார்களே, அது உண்மையா? அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நான் ஏற்கெனவே இரண்டாம் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். வாரியத்தின் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் வேண்டாம் என அறிவித்த சில பணியாளர்களைத் தவிர மற்ற பணியாளர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

சிலைகள் திருட்டு.

* 156 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டின் கோயில்களில் உள்ள கலை நுணுக்கம் வாய்ந்த சிலைகள் திருடப்பட்டு வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த சிலைகளைத் திருடுவதற்காக ஒரு தனிக்கூட்டமே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவற்றை உடனடியாக கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா? இப்படிப்பட்ட நுணுக்கமான சிலைகள், அதிகம் விலையுயர்ந்த சிலைகள்—சில சிலைகள், ரூ. 75 லட்சம் வரைகூட விற்கிறது என்று சொல்கிறார்கள்—ஆகியவற்றை அரசாங்கமே . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

---

* 120—121-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டு உள்ளது.

[1972 சனவரி 29

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. கே. ஏ. வகாப் : அப்படிப்பட்ட சிலைகளைப் பாதுகாப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பேரவையின் முன் வைக்கப்பட்டு இருக்கும் விவர அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அரசாங்கமே சிலைகளை விற்பதற்கான யோசனை எதுவும் இல்லை.

Kalyana Mandapam in Sri Kapaleeswarar Temple

* 157 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Kalyana Mandapam of the Sri Kapaleeswarar Temple in Mylapore is leased at heavy rent;

(b) if so, the details thereof; and

(c) the details of the steps taken to rent it to poor people?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the terrible exploitation by the richer class by constructing *kalyana mantapams* and letting them out at very, very high rates, will this Religions Endowment Department consider constructing small *kalyana mantapams* for poor sections of the public?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சாதாரண ஏழை எளிய மக்கள் கோவில்களில் சென்று திருமணம் செய்துகொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. குறைந்த கட்டணமே வசூல் செய்யப்படுகிறது. ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

அழகர்கோவிலுக்கு சாலை.

* 158 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அழகர்கோவிலில் அடிவாரத்திலிருந்து மலை உச்சிவரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?